# வடநாட்டுச் சுரண்டல் ஒழிப்புப் போர்!
# பெண்களுக்கு அழைப்பு!

சென்னையில் நடைபெறுகிற வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு மறியலிலே இவ்வட்டார மக்கள் பெரும் பங்கு கொண்டு, பெருவாரியாகச் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். அதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனாலும், இத்தகைய போராட்டத்திற்கு - நாட்டு விடுதலைக்கான நல்லதொரு கிளர்ச்சிக்கு ஆண்கள்தான் முன் வந்தார்களே தவிர, தாய்மார்கள் யாரும் இந்த வட்டாரத்திலிருந்து இன்னும் வரவில்லை. இதிலே சேலம் மாவட்டம் தான் முதல் பரிசு பெற்றது. அங்கிருந்து தாய்மார்கள் தங்கள் குடும்பத்துடன் போந்து மறியல் செய்து சிறையேகினார்கள். எனவே, இந்த வட்டாரத்து அருமைத் தாய்மார்களும் போராட்டக் கிளர்ச்சியிலே ஈடுபட்டுத் தியாகிகள் பட்டியலிலே தங்களது பெயரையும் சேரும்படிச் செய்ய வேண்டும்.

"அடுப்பூதும் அணங்குகளாக அடைபட்டுக் கிடக்கும் பெண்டிராகவே நாம் காலங்கழிக்கக் கூடாது. பெண்ணுரிமை, மாதர் விடுதலை வேண்டித்தான் திராவிடர் கழகமும், மாபெருந் தலைவர் பெரியார் அவர்களும் கடந்த 30 ஆண்டுகளாகப் பாடுபட்டு வருகிறார்கள்."

"ஆனால், நம்முடைய பெண்களுக்கு இன்னும் சரியான அறிவு வரவில்லை. அவர்கள் கருதுகிறார்கள், தாங்கள் அடிமைகளாக இல்லை என்று. இன்றைய தினம் இருக்கிற நிலையைத்தான் வேத நாயகன் பெண்களுக்கென்று அமைத்தான். அது மாறக்கூடாது என்றுதான் கருதுகிறார்கள். காரணம் என்னவென்று கேட்டால்,

பெண்டிர் இன்னும் படிப்புணரவில்லை; தாய்மார்கள் கல்வி கற்க வேண்டும். தங்கள் இன முன்னேற்றங் கருதித் தொண்டு புரிய வேண்டும். இந்தப் போராட்டத்திலே பெரும் பங்கு கொள்ள வேண்டும்."

*- "விடுதலை" (25.3.1951)*